| DIP–339 | DMA-01 |
|---|---|

# DIPLOMA PROGRAMME EXAMINATION – JUNE, 2019

## மக்கள் தகவல் தொடர்பு அறிமுகம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. தகவல்களை, குறியீடுகளாக மாற்றும் செயலை எவ்வாறு கூறுவார்கள்?

2. காட்சித் தொடர்பியலில் (Visual Communication) எந்த வடிவத்தில் தகவல் பரிமாற்றம் நடைபெறுகிறது?

3. தகவல் சமூக தினம் எந்த மாநாட்டின் நினைவாக கடைப்பிடிக்கப்படுகின்றது?

4. ஒளிப்படக் கருவியின் (camera) அடிப்படைத் தத்துவத்தை தந்தவர் யார்?

5. நடைமுறைக்கு வந்த முதல் ஒளிப்படத்திற்கு என்ன பெயர் சூட்டப்பட்டது?

6. வெப் பிலாக் (web blog) எனப்படும் வலைப் பதிவினை முதலில் வழங்கியவர் யார்?

7. தகவல் நெடுஞ்சாலை என குறிப்பிடப்படுவது எது?

8. வீடியோ என்னும் ஆங்கிலச் சொல் எதிலிருந்து வந்தது?

9. பத்திரிகை மற்றும் புத்தகப் பதிவுச் சட்டம் எந்த ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது?

10. சுவரொட்டிகளைத் தயாரிக்க எகிப்தியர்கள் எந்தப் பொருளைப் பயன்படுத்தினார்கள்?

11. ஒற்றைக் கலாச்சார முறைமைக்கு முக்கியக் காரணியாக விளங்குவது எது?

12. சைஃபர் சட்டங்கள் எந்தச் சட்டப் பிரிவின் கீழ் வருகிறது?

13. ஜிஐஎஃப் (GIF) விரிவாக்கம் தருக.

14. இந்தியாவிற்குள் வண்ணத் தொலைக்காட்சி எப்போது பயன்பாட்டிற்கு வந்தது?

15. புளூம்பெர்க் (Bloomberg News) செய்தி நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. தகவல் தொடர்பியல் விளக்குக.

17. தகவல்யுகம் குறிப்பு வரைக.

18. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒளிப்பரப்படுகின்றன?

19. தூது அனுப்புதலின் முக்கியத்துவம் என்ன?

20. ஒளிப்படம் என்றால் என்ன?

21. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களின் வகைகளை விளக்குக.

22. வலைக்குழுக்கள் மூலம் ஏற்படும் நன்மைகள் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. அச்சு ஊடகத்தின் வளர்ச்சி குறித்து விளக்குக.

24. ஊடகங்களின் போலி செய்திப் பரப்புரையால் ஏற்படும் தீங்கினைப் பற்றி எழுதுக.

25. ஒளிப்படக் கருவியின் வகைகள் குறித்து எழுதுக.

26. இதழியல் நெறிமுறைகளை விளக்கி எழுதுக.

27. பத்திரிகை மற்றும் புத்தகப் பதிவுச் சட்டம் முன் வைக்கும் சட்ட வரைபுகள் என்ன?

28. தகவல் பரிமாற்றத்தில் மரபு வழி ஊடகங்களின் பங்கு என்ன?

29. ஒளிப்படப் பரிமாற்ற நுட்பங்கள் பற்றித் தெளிவுப்படுத்துக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஆதிமனிதர் எவ்வாறெல்லாம் தகவல் பரிமாற்றம் செய்தார்கள் என்பதை விரிவாக எழுதுக.

31. வலை வானொலி ஒலிபரப்பு முறையின் படி நிலைகளை விளக்குக.

32. நேரடித் தகவல் தொடர்பு பற்றி விளக்கி வரைக.

33. மரபு வழி ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி பற்றி விவாதிக்க.

34. சொல் அல்லாத தொடர்பு முறையை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.

| | |
|---|---|
| **DIP–340** | **DMA–02** |

# DIPLOMA PROGRAMME EXAMINATION – JUNE, 2019.

இதழியல் (Journalism)

Time : Three hours Maximum marks : 75

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. உலகில் முதன்முதலில் தோன்றிய இதழ் எது?

2. இந்தியாவின் முதல் இதழ் எது?

3. அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

4. செய்தியைச் செப்பணிடுவதிலுள்ள இரு பணிகளைக் குறிப்பிடுக.

5. 'Proof Reading' என்பதன் தமிழாக்கம் என்ன?

6. PTI என்றால் என்ன?

7. உலகின் முதல் செய்தி நிறுவனத்தை அமைத்தவர் யார்?

8. தமிழில் கருத்துப்படங்களை முதலில் வெளியிட்டவர் யார்?

9. இந்திய அரசின் செய்தித் தொடர்பு துறையின் பணியில் ஒன்றைக் குறிப்பிடுக.

10. எவ்வகைச் செய்திக்குச் செய்தியாளர் முக்கியத்துவம் தரவேண்டும்?

11. செய்தியாளர் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படைப் பயிற்சிகள் இரண்டினை எழுதுக.

12. தேசியச் செய்தியாளர்கள் யார்?

13. தமிழில் இதழியல் குறித்து நூல் எழுதிய இருவரைக் குறிப்பிடுக.

14. பணி செய் இதழாளர் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

15. இதழாளர் கையேடு எழுதியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. பெங்கால் கெசட், மெட்ராஸ் கெசட் வெளிவந்த ஆண்டு எது?

17. இதழ்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தை யார் எந்த ஆண்டு கொண்டு வந்தார்?

18. காந்தியடிகள் நடத்திய இரண்டு இதழ்களைக் குறிப்பிடுக.

19. டாக்டர் அம்பேத்கர் நடத்திய இரண்டு இதழ்களைக் குறிப்பிடுக.

20. ஜி.சுப்ரமணி ஐயர் பற்றி இரு செய்திகளைக் குறிப்பிடுக.

21. பண்டித அயோத்திதாசர், பெரியார் ஈ.வெ.ரா நடத்திய இதழ்களைக் குறிப்பிடுக.

22. செய்தியாளரின் பண்புகள் இரண்டினை எழுதுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பக்க அளவில் விடை தருக.

23. இந்திய மொழிகளில் வெளிவந்த முதல் இதழ்கள் பற்றி எழுதுக.

24. விடுதலைக்கால இதழ்கள் பற்றிச் சுருக்கி எழுதுக.

25. இதழ்களின் சட்டங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

26. செய்தி நிறுவனங்களின் பணிகள் யாவை?

27. ஆசிரியர் குழுவின் பணிகள் யாவை?

28. இணைய வளர்ச்சிக்குப் பிறகு இதழ்களின் நிலை என்ன?

29. இந்திய இதழ்கள் ஜனநாயகத்தின் தூணாக இருக்கின்றதா? நும் கருத்தைக் கூறுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
மூன்று பக்க அளவில் விடை தருக.

30. இதழ்கள் தோன்றிய வரலாறு பற்றி ஒரு கட்டுரை வரைக.

31. சமுதாய வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு பற்றி விவரி.

32. இதழ்களின் வகைகளைப் பற்றி விவரி.

33. செய்திகளைச் சேகரித்தலும் செம்மைப்படுத்தலும் பற்றி விளக்குக.

34. இதழ்களின் வளர்ச்சிக்கு விளம்பரம் உதவும் வகையினை விளக்குக.

———————

| DIP – 341 | DMA-03 |
|---|---|

# DIPLOMA IN MEDIA ART EXAMINATION – JUNE, 2019.

வானொலி தொலைக்காட்சிக் கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. வானொலியைக் கண்டறிந்தவர் யார்?

2. மின்காந்த அலைகள் மணிக்கு எவ்வளவு வேகத்தில் செல்லும்?

3. ஆல் இந்திய ரேடியோ (AIR) பெயர் உருவாக்கியவர் யார்?

4. தமிழ் நாட்டின் மூத்த செயற்கைக் கோள் எது?

5. இந்தியா ஏவிய பெயர் சூட்டியவர் யார்?

6. வானொலி என்று முதல் செயற்கைக் கோள் எது?

7. தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர் யார்?

8. தொலைக்காட்யின் தந்தை யார்?

9. VHS என்றால் என்ன?

10. முதல் வண்ணத் தொலைக்காட்சி எந்த ஆண்டு உருவானது?

11. வீடியோ என்பது எந்த மொழிச் சொல்லில் இருந்து உருவனது?

12. பி.பி.சி என்பதன் விளக்கம் யாது?

13. இந்தியாவில் தொலைக்காட்சி நிறுவனம் எப்போது உருவாகியது?

14. 'எடிட்டிங்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் என்ன?

15. 'Animation' என்பதன் தழிழாக்கம் என்ன?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. பண்டைக்கால எழுத்து வழி ஊடகத்திற்கு இரு சான்றுகள்.

17. செய்தி எழுதுவோரின் தகுதிகள் இரண்டினை எழுதுக.

18. 'Short' வகைகளில் இரண்டினை எழுதுக.

19. தொலைக்காட்சி நிலையத்தின் மூன்று பிரிவுகள் யாவை?

20. செய்திகளின் வகைகள் இரண்டினை எழுதுக?

21. விளம்பரத்தின் இருவகைகளைக் கூறுக.

22. நிகழ்ச்சியை வழங்குவதில் சிறப்பாகப் பணியாற்றிய வானொலி நிலையம் எது?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. அறிவித்தல் பற்றி எழுதுக.

24. வானொலி விளம்பரங்கள் பற்றிக் கூறுக.

25. தொலைக்காட்சிக்கு செய்தி எழுதும் முறை பற்றிக் கூறுக.

26. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வகைகள் பற்றிக் கூறுக.

27. தனியார் தொலைக்காட்சிகள் பெருகியதற்கான காரணம் என்ன?

28. வானொலியின் நன்மைகள் யாவை?

29. தொலைக்காட்சியின் தீமைகள் யாவை?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. இந்தியாவில் வானொலி வளர்ச்சிப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

31. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் எழுதும் முறைமைப் பற்றி விளக்குக.

32. ஒலி ஒளி ஊடகங்களும் செய்தி வடிவங்களும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

33. விளம்பரங்களால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றி ஆராய்க.

34. நேர்முக வர்ணனையின் சிறப்பு அம்சங்கள் யாவை?

———————

| DIP–342 | DMA–04 |
|---|---|

DIPLOMA PROGRAMME EXAMINATION – JUNE 2019

திரைப்படக் கலை (Film Art)

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. தமிழ் சினிமா முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக.

2. உலகின் முதல் திரைப்படம் எந்த நகரில் காட்டப்பட்டது?

3. இந்தியாவின் முதல் பேசும் படம் வெளியான ஆண்டு எது?

4. காட்சியளவு (Shot) என்றால் என்ன?

5. ஒப்பனை என்றால் என்ன?

6. புகழ் பெற்ற பாடலாசிரியர் இருவரைக் குறிப்பிடுக.

7. கரு (Theme) என்றால் என்ன?

8. புகழ் பெற்ற படத்தொகுப்பாளர் இருவரைக் குறிப்பிடுக.

9. திரை வசனத்தில் புகழ் பெற்ற இருவரை எழுதுக.

10. எந்த இருவரின் மேசையில் திரைப்படம் உருவாகிறது?

11. ‘கால்–ஷீட்’ (Call-Sheet) இதன் தமிழாக்கம் என்ன?

12. வெளிப்புறப் படப்பிடிப்பு எடுக்கப்படும் இடங்கள் இரண்டினை எழுதுக.

13. முன்பார்வைக் காட்சி (Pre-view show) என்றால் என்ன?

14. பின்னணிக்குரல் என்றால் என்ன?

15. புகழ் பெற்ற புராணப்படம் இரண்டினைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. உலகத் திரைப்பட முன்னோடிகள் சிலரைக் குறிப்பிடுக.

17. திரைத்துறையில் தாமஸ் ஆல்பா எடிசனின் பங்கு என்ன?

18. தமிழில் திரைப்படம் பற்றி நூல்கள் எழுதிய நால்வரைக் குறிப்பிடுக.

19. தாழ்கோணம் என்பது யாது?

20. மாண்டேஜ் எனப்படும் உத்தி பற்றி கூறுக.

21. வரைகலை (Graphics) பற்றிக் கூறுக.

22. குறும்படங்கள் பெருகுவதற்கான இரு காரணங்களை எழுதுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மௌனத் திரைப்படங்கள் பற்றி குறிப்பிடுக.

24. ஒருங்கமைத்தல் (Composition) பற்றிக் குறிப்பிடுக.

25. திரைப்பாடல்கள் பற்றி எழுதுக.

26. படப்பிடிப்பின்போது நிகழும் முக்கிய நிகழ்வுகள் யாவை?

27. விளம்பரப்படங்கள் செலுத்தும் தாக்கம் குறித்து எழுதுக.

28. தொலைக்காட்சி வருகைக்குப் பின் திரைப்படநிலை எவ்வாறு உள்ளது?

29. அண்மைக்கால தமிழ்த் திரைப்படங்கள் பற்றி உம் கருத்துக்களைக் கூறுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. உலகத் திரைப்பட வரலாறு பற்றி ஒரு கட்டுரை வரைக.

31. காட்சியளவும் கோணமும் (Shot and Angles) பற்றி ஒரு கட்டுரை வரைக.

32. திரை உத்திகள் (Film Techniques) பற்றி ஒரு கட்டுரை வரைக.

33. தயாரிப்புப்பின் பணிகள் (post production work) பற்றி விவரி.

34. பலவகையான திரைப்படங்கள் பற்றி விளக்கி உரைக்க.

———————

| **DIP–343** | **DMA–05** |
|---|---|

# DIPLOMA PROGRAMME EXAMINATION – JUNE, 2019.

மொழித்திறன் ஊடகங்களுக்கு எழுதுல்

Time : Three hours          Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. ‘வார்த்தை பதினாயிரத்து ஒருவர்’ என்று கூறிய புலவர் யார்?

2. பேச்சுக்கலைப் பயிற்சி நிலையத்தை அமைத்த சிந்தனையாளர் யார்?

3. ‘பட்டிமண்டபத்துப் பாங்கறித்து ஏறுமின்’ என்ற தொடர் அமைந்த நூல் எது?

4. தமிழகத்தின் புகழ்பெற்ற பேச்சாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.

5. உள்ளத்தின் போக்குப்படி அமைவதே கட்டுரை என்றவர் யார்?

6. ‘உரை வகை நடையே நான்கு என மொழிப்’ எனக் கூறும் நூல் எது?

7. கட்டுரை என்ற சொல் எந்த இரு சொற்களின் கூட்டு?

8. தன்வரலாற்றுக் கட்டுரை நூல் நான்கினைக் குறிப்பிடுக.

9. பிரெஞ்சு மொழியில் ‘எஸ்ஸே’ என்பதன் பொருள் என்ன?

10. எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கால ஆராய்ச்சி நூல் ஒன்றினைக் குறிப்பிடுக.

11. குறிப்பிடத்தக்க உண்மையான நடுநிலையான தொகுப்பே செய்தி என்றவர் யார்?

12. தனித்தன்மையும் ஆர்வத்தைத் தூண்டுவதும் செய்தி என்றவர் யார்?

13. கடிதங்கள் இடம் பெறும் பழந்தமிழ் நூல் எது?

14. இலத்தீன் மொழிக் கடிதங்கள் எழுதியவர் யார்?

15. இரசனை முறைத் திறனாய்வின் தந்தை யார்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. பேச்சுக்கலையின் பண்புகள் இரண்டினை எழுதுக.

17. இலக்கியக் கட்டுரையின் பண்புகளில் ஒன்று எழுதுக.

18. கருத்துரை என்றால் என்ன?

19. கடிதங்களின் பொதுத் தன்மைகளில் இரண்டினைக் கூறுக.

20. ஊடகம் என்றால் என்ன?

21. மொழித்திறன் என்றால் என்ன?

22. முகநூல் பயன் இரண்டினைக் கூறுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. பேச்சாளரின் தகுதிகள் சிலவற்றை எழுதுக.

24. பொதுக்கட்டுரையின் பண்புகள் யாவை?

25. அரசுச் செய்திகள் பற்றிக் கூறுக.

26. சுருக்கி வரைதல் பற்றிச் சில கருத்துகளைக் கூறுக.

27. நூல் மதிப்புரை பற்றிக் கூறுக.

28. சமகாலத்தின் வலிமையான ஊடகங்கள் பற்றி எழுதுக.

29. இணையத்தின் நன்மைகள் பற்றி எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. பேச்சு, கலையாவதற்குரிய படிநிலைகள் யாவை?

31. கட்டுரைகளின் வகைகள் யாவை?

32. பத்திரிகைச் செய்திப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

33. கடிதங்களின் வகைகளை விவரி.

34. பல்துறைத் திறனாய்வுகள் பற்றி விவரி.